**சுருக்கம்**

தொடக்கக்கல்வி – மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – முன்னுரிமை இருந்தும் இதுவரை நியமனத்திற்கு தகுதி பெறாத பொருளாதாரம், வணிகவியல் போன்ற பாடங்களில் 01.01.2007 அன்றைய நிலவரப்படி பட்டம் பெற்றவர்களுக்கு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும் பதவி உயர்வு அளித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (ஜி2) துறை

அரசாணை (நிலை) எண்.134 நாள்.15.06.2007

படிக்க:

தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.3300/டி4/06, நாள் 10.05.2007

ஆணை:

மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களால் பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. முன்னுரிமை இருந்தும் இதுவரை நியமனத்திற்கு தகுதி பெறாத பொருளாதாரம், வணிகவியல் போன்ற பாடங்களில் 01.01.2007 அன்றைய நிலவரப்படி பட்டம் பெற்றவர்களுக்கு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்படும்.

2.மேற்படி அறிவிப்பு தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக்கல்வி இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

(i) அரசாணை நிலை எண்.400 கல்வி நாள் 25.5.95 –ன்படி, நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் தமிழாசிரியர், பி.எட்., பட்டம் பெற்ற மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களை கொண்டே நிரப்பப்பட்டு வருகிறது. இதைத் தவிர பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர்கள் , தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களில் பட்டதாரி தகுதி படைத்தவர்களைக் கொண்டும், தமிழாசிரியர் பணியிடங்களில் விதிகளின்படி பி.ஏ., தமிழ் பி.லிட்., மற்றும் பி.எட்., தகுதி பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வருகிறது.

(ii) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி சார்நிலைப் பணிக்கான தனி விதிகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் இதுவரை சேர்க்கப்படாமல் உள்ளது. நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குத் தேவையான கல்வித் தகுதிகள் "A degree of any university in the state or a degree of equivalent standard and B.T. or B.Ed., degree of any university in the state" என மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், "A degree" என்ற வார்த்தையில் எந்த பாடத்தில் எனக் குறிப்பிடாததால் "Any Degree" எனப் பொருள் கொள்ளலாம் என ஆசிரியர்கள் விவாதித்து வருகிறார்கள். இதனால் நடுநிலைப் – பள்ளிகளில் B.A. (Economics) B.Com., B.A., (Political Science) போன்ற பட்டம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் செய்ய கோருகிறார்கள்.

(iii) நடுநிலைப்பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் மொழி பாடம் நீங்கலாக அறிவியல், கணிதம் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகிற. பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் காலி ஏற்படும் போது இடைநிலை ஆசிரியர்களில் பி.எட்., பட்டம் பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப்படுகிறது. அவ்வாறு நிரப்பும் பொழுது இளங்கலைப் பட்டத்தில் என்ன பாடம் முக்கிய பாடமாக எடுத்து பட்டம் பெற்றிருக்க

வேண்டும் என வரையறுக்கப்படவில்லை. இதனால் சில மாவட்டங்களில் பொருளாதாரம், வணிகவியல் போன்ற பிற பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு அளித்தும், வேறு சில மாவட்டங்களில் இப்பாடங்கள் நடுநிலைப்பள்ளி பாடத்திட்டத்தில் இடம் பெறாததால் பதவி உயர்வு அளிக்கப்படாமல் உள்ள நிலை உள்ளது. பதவி உயர்வு அளிக்கப்படுவதில் மேலே குறிப்பிட்டவாறு ஒரே சீரான நிலை இல்லாதது இயற்கை நீதிக்கு (Natural Justice) புறம்பானதாக உள்ளது என்பதையும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர் எனவும் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, மேலே பத்தி இரண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தொடக்கக்கல்வி இயக்குநர் 01.01.07 முடிய இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் எந்த பாடத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருந்தாலும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கான பெயர் பட்டியலில் இத்தகையவர்களின் பெயர்களை சேர்த்து பதவி உயர்வு வழங்கவும், 01.01.07–க்குப் பிறகு இதர பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படி பதவி உயர்வு சலுகை நீட்டிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கலாம் எனவும், மேலும் ஒரு சில நிகழ்வுகளில் ஒரு சில இதர பாடங்களில் சமீபகாலத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு நிலை இறக்கம் செய்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன எனவும், இவர்களில் சிலர் நீதிமன்றத்திற்கும் சென்றுள்ள நிலையில் இந்நிகழ்வுகளைத் தனி [illegible] கருதி நிலை இறக்க ஆணைகளை இரத்து செய்து மீளவும் பட்டதாரி, தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கலாம் எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4.மேலே பத்தி 3–இல் உள்ள தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது.

01.01.07 முடிய இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் எந்த பாடத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருந்தாலும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கான பெயர்ப்பட்டியலில் இத்தகையவர்களின் பெயர்களை சேர்த்து கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கலாம்.

**நிபந்தனை:**

(i) 01.01.07க்குப் பிறகு இதர பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படி பதவி உயர்வு சலுகை நீட்டிக்கப்படமாட்டாது.

(ii) இவ்வாணைகள் உதவி பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

(iii) ஒரு சில நிகழ்வுகளில் ஒரு சில இதர பாடங்களில் சமீப காலத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு நிலை இறக்கம் செய்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் நீதிமன்றத்திற்கும் சென்றுள்ளனர். எனவே, இந்நிகழ்வுகளைத் தனி வழக்காகக் கருதி நிலை இறக்க ஆணைகளை இரத்து செய்து மீளவும் பட்டதாரி / தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/